**சிறப்பு நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்**

**முன்னிலை : திரு.மு. வடிவேல், பி.காம்., பி.எல்.,**

**சிறப்பு நீதிபதி எண்.1, ஜெயங்கொண்டம்**

**2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் தேதி புதன் கிழமை**

**அசல் வழக்கு எண்.15/2021 ( CNR No.TNAL06-000341-2021)**

**(ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.78/2020)**

1. திருமதி. கஸ்தூரி
2. திருமதி. அலமேலு ... வாதிகள்

**எதிர்**

1. திருமதி. மணிமேகலை
2. திருமதி. தனபாக்கியம் அம்மாள்
3. செல்வி. அருள்தேவி
4. இளவர் தர்மராஜ் ... பிரதிவாதிகள்

| |
|---|
| 4 ஆம் பிரதிவாதி சார்பாக<br>தாய் 2 ஆம் பிரதிவாதி |

இவ்வழக்கு முதன் முதலில் ஜெயங்கொண்டத்தில் உள்ள சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அங்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்தபோது அரியலூரில் உள்ள முதன்மை மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு வந்தவுடன் புதிதாக வழக்கு எண் கொடுக்கப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிலுவையில் இருந்து வந்த இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.திருமால்சோழன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 2 ஆம் பிரதிவாதி இறந்த நிலையில், 3 மற்றும் 4 ஆம் பிரதிவாதி தோன்றா தரப்பினர்களாகவும் இருந்த வந்த இவ்வழக்கு 06.04.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகளை அழைத்தபோது ஆஜராகவில்லை. எனவே வழக்கு ஆவணங்கள் பார்வையிட்டதன்

அடிப்படையில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

1. தாவா சொத்துக்களில் B ஷெட்யூல் சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1ஆம் பிரதிவாதியை உள்ளடக்கிய பொது கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என விளம்புகை செய்தும், B ஷெட்யூல் சொத்தில் வாதிகளின் அனுபவத்தினை 2 முதல் 4 பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியும், A, B ஷெட்யூல் சொத்துக்களில் வாதிகளுக்கு சேரவேண்டிய தலா 1/3 பாகத்தை விளம்புகை செய்து முதல்நிலை தீர்ப்பாணை வழங்கியும், நீதிமன்ற ஆணையரை நியமணம் செய்து நளஇளப்பம் சரிகட்டி 1ஆம் பிரதிவாதி, வாதிகளுக்கு 1/3 பாகத்தை பிரித்து தனி சுவாதீனம் கொடுக்க இறுதி நிலை தீர்ப்பாணை வழங்கியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கில் 2 பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில் 2ஆம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க வழக்கு பல வாய்தாக்களாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பலமுறை வாய்ப்புகள் வழங்கியும் நடவடிக்கை எடுக்கவில்லை. வாதிகள் தொடர்ந்து ஆஜராகவில்லை. இதனை அடுத்து இவ்வழக்கினை வாதிகளின் தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்திட இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக வாதிகளின் தவறுகையின் காரணமாக இந்த வழக்கை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் திருத்தப்பட்டு இன்று 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

M VADIVEL
Digitally signed by M VADIVEL
Date: 2022.04.06 17:14:14 +0530

சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.